ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 7 இதழ் : 5 மார்ச் – 2011

## செய்திமலர்



**நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்,**

மாற்கு 11 :24

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



**ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!**

இந்த மார்ச் மாத இதழ் மூலமாக, உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கடந்த பிப்ரவரி மாதம் முழுவதிலும் தேவன் நம்மை நடத்தி வந்த கிருபைக்காக தேவனைத் துதிக்கிறேன். கடந்த பிப்ரவரி மாதம் 1ம் தேதி முதல் 8ம் தேதி வரை பீல் சுதேச ஊழியர்களுக்கான கூடுகைகள் மிக சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் மூலமாக 450 சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுக்கும் சிறப்பு தரின கூடுகைகள் 5 இடங்களிலும் தேவன் ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார். இந்தக் கூட்டங்களின் மூலமாக ஊழியர்களின் மனைவிமார்கள் புதிய கிருபைகளையும், தரிசனங்களையும் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டார்கள். அதுபோல குஜராத் மாநிலம், தாகோத் தாலுகாவிலுள்ள சபை மூப்பர்களின் மனைவிமார்களுக்கென்று விசேஷித்த கூடுகை 17, 18, 19 ஆகிய தினங்களில் நடைபெற்றது.

பிப்ரவரி 21ம் தேதி முதல் 25ம் தேதி வரை, மூன்று மருத்துவ முகாம்கள் மற்றும் 100 ஊழியர்களுக்கு ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்கள் 5 நாட்கள் நடத்த தேவன் கிருபை செய்தார். இதன் விபரங்களை அடுத்த மாத பத்திரிகையில் வெளியிடுகிறோம்.

ஊழியங்களுக்கும், எங்களுக்கும் உங்களுடைய ஜெபம் மற்றும் ஆதரவுகள் இன்னும் அதிகமாக தேவைப்படுகிறது.

கடந்த மாதத்தில் நான் நம்முடைய ஷாலோம் ஆதரவாளர்களையும் சபைப் போதகர்களையும் ஊழிய ஸ்தாபகர்களையும் நேரில் சந்தித்து ஜெபிக்கவும், ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொள்ளவும் ஆண்டவர் கிருபை பாராட்டினார். நம்முடைய பீல் ஆதிவாசி பிள்ளைகளுடைய படிப்பிற்காவும், தேர்விற்காகவும் ஜெபிக்க மறவாமல் மிக அன்பாய் கேட்கிறேன்.

தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், பணித்தள அலுவலக ஊழியர்கள், நமது சுதேச ஊழியர்கள், Compassion Project ஊழியர்கள் ஆகியோருக்காக தொடர்ந்து மறவாமல் ஜெபியுங்கள்!

**“கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்,**
**அவர் ஆசீர்வதிப்பார்”.** சங்கீதம் 115:12

*தேவ அறுவடைப்பணியில் உங்கள் அன்பு சகோதரன்*

(Rt. Rev. Dr. V. Devadass)

மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468



# "இயேசு கிறிஸ்துவின் ஜெபம்"

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெபம் என்பது நாம் விடுகிற மூச்சை போன்ற தாகும். ஜெபம் ஒன்றே தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை பெலப்படுத்துகிறது. ஜெபம் இல்லாத விசுவாசியின் வாழ்க்கை வறட்சியான வாழ்க்கை, **"குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரை இல்லாத வீடு".** ஜெபிக்காத சபை வளர்ச்சி பெற முடியாத சபை. ஜெபம் பரலோகம் செல்லும் போது ஆசீர்வாதங்கள் பூவினில் இறங்கும். ஜெபமே ஜெயம் என்று நாம் நன்கு அறிந்திருக்கிறோம். வேதத்தில் பழைய ஏற்பாட்டில் தேவ தாசர்களுடைய ஜெபம் தனிப்பட்ட வாழ்க்கையில், ஊழியப்பாதையில், தேசத்தில் எவ்வளவு கிரியைகளை நடப்பித்தது என்று வாசிக்கிறோம். அதுபோலவே அப்போஸ்தலர் நடபடிகளில் ஜெபம் எப்படியாக ஆதி அப்போஸ்தல சபையில் கிரியைகளை நடப்பித்தது என்பதையும் காண்கிறோம்.

எல்லாவற்றிக்கும் மேலாக நம் இரட்சகர் இயேசு கிறிஸ்துவைப் போல் ஜெபித்தவர் யாருமில்லை. அவரே நமக்கு முன் மாதிரியாக இருக்கிறார். சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம். இயேசு விடியற்காலையில் ஜெபித்தார். சில வேலையில் இரவெல்லாம் ஜெபித்தார். ஆத்தும பாரத்துடன் ஜெபித்தார். சத்தமிட்டு ஜெபித்தார். உபவாசித்து ஜெபித்தார். ஆகவே இயேசு கிறிஸ்து நம் ஜெப வாழ்விற்கு முன் மாதிரியாக இருக்கிறார். சுருக்கமாக இயேசுவின் வாழ்க்கையில் அவருடைய மூன்று ஜெபங்களை சற்று தியானிப்போம்.

## இயேசு கற்றுக் கொடுத்த ஜெபம்

இயேசு கிறிஸ்துவுடன் சீஷர்கள் அநேக காரியங்களை பார்த்தார்கள். கற்றுக் கொண்டார்கள். அதேவேளையில் இயேசுவின் ஜெப வாழ்க்கையை கண்ட அவர்கள் ஜெபிக்க கற்றுத் தரும்படி கேட்டுக் கொண்டார்கள். (லூக்கா 11:1) இயேசு கிறிஸ்துவும் மிக அழகாக எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுத்தார். அதை நாம் கர்த்தருடைய ஜெபம் (Lords Prayer) என்று கூறுகிறோம். நான் சிவகாசி ஊரில் பிறந்து வளர்ந்தவன். C.S.I ராக்லண்டு ஞாபகார்த்த ஆலயத்தில் ஒரு சபை அங்கத்தினர். என்னுடைய தாத்தா ஜெபமணி வாத்தியார் அவர்களை அந்த மிகப் பெரிய ஆலயத்தை கட்டுவதற்கு முன்னோடியாக இருந்து உழைத்தவர்கள். என்னுடைய பெரியப்பா திரு. தானியேல் என்பவர் ஆலயத்தில் ஆர்கன் வாசிப்பார்கள். என் தகப்பனார் திரு. வேதமணி அவர்கள் பாடகர்குழு பொறுப்பாக இருந்து (Choir Master)

ஆராதனைகளை சிறப்பாக நடத்துவார்கள். என் சிறு பிராயத்தி–ருந்து நானும் பாடகர் குழுவில் பங்கு பெற்று வருவேன். அப்போது ஜெப புத்தகத்தில் ஆராதனை கர்த்தருடைய ஜெபத்தினை குருவானவருடன் சேர்ந்து சபையாராக இணைந்து சொல்லுவோம். நானும் கிளிப்பிள்ளை சொல்வது போல் அதன் அர்த்தம் அறியாமல் சொல்– வந்தேன். 19ம் வயதில் தேவனை ஏற்றுக் கொண்டபின்பு கர்த்தருடைய ஜெபத்தை வாசிக்கும்போது அதில் உள்ள ஆழமான சத்தியத்தை தேவன் கற்றுக் கொடுத்தார்.

**கர்த்தருடைய ஜெபம்**

நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது : பரமண்டலங்களி–ருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்ததப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக ; உம்முடைய சித்தம் பரமண்டலங்களிலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென். (மத்தேயு 6 : 9–13)

முதலாவது, நம் ஜெபங்கள் **“பரமண்டலங்களி–ருக்கிற எங்கள் பிதாவே”** என்று ஆரம்பமாகிறது. நம்முடைய அனைத்து ஜெபங்களையும், பிதாவினிடத்தில்தான் கூறி ஜெபிக்க வேண்டும். வேறு எந்த மனிதனோ, இல்லையெனில் தேவனுடைய தாசர்களின் நாமமோ இல்லை. பிதாவே என்றுதான் நாம் ஆரம்பிக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவும் அதையே கூறுகிறார். என் (இயேசுவின்) நாமத்தினாலே பிதாவை கேட்டுக் கொள்வது எதுவோ.... (யோவான் 15:16) மேலும் நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்கு தருவார். (யோவான் 16:23) அதே வேளையில் பிதாவினுடைய நாமம் பரிசுத்தம் என்பதை அறிக்கை செய்கிறோம். நம் தேவாதி தேவனுக்கு ஆயிரம் நாமங்கள் இருப்பின், ஒவ்வொரு நாமத்திலும் அபிஷேகமும், வல்லமையும், கிருபையும் உண்டு. ஆனால், மிக முக்கியமான ஒன்று, அவர் நாமம் பரிசுத்தமானது என்பதே நாம் மறக்கவேகூடாது. பரிசுத்தமான பிதாவிடம் வேண்டிக் கொள்ளும்போது, நம்மை அவர் பரிசுத்தப்படுத்தவும், நம்மை நாம் பரிசுத்தத்திற்கும் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, **“உம்முடைய இராஜ்யம் வருவதாக”** இந்த உலகத்தில் நம் தனிப்பட்ட வாழ்விலே, குடும்பத்திலே, செய்யும் வேலைகள், தொழில் மற்றும் ஊழியங்களிலே நம்முடைய ராஜ்யம் அல்ல ஆனால் தேவனுடைய ராஜ்மே கட்டப்படவேண்டும். அநேக நேரங்களில், ஆரம்ப

நாட்களில் தங்களை தாழ்த்தி தேவனிடத்தி–ருந்து ஆசீர்வாதங்களை பெற்றுப் பின்பு, தங்கள் ராஜ்யத்தை கட்டுகிறவர்களாக காணப்படுவார்கள். ஆகவே தான் அனுதினமும் ஜெபிக்கும்போது அவருடைய ராஜ்யம் வருவதாக என்று கூறி அவர் நாமத்தை உயர்த்த வேண்டும்.

மூன்றாவதாக, அவர் ராஜ்யத்தை எப்படி நாம் வாழ்வில், குடும்பத்தில், ஊழியத்தில் வரவழைப்பது? இயேசு என்ன ஆலோசனை தருகிறார். **"உம் சித்தம் செய்யப்படுவதாக"** என்று ஜெபத்துடன் அர்ப்பணிக்கவேண்டும். நம்மைப் பற்றிய அனைத்து காரியங்களும் பரலோகத்தில் தேவன் என்ன நினைத்து வைத்து இருக்கிறாரோ, அது மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும். அவர் சித்தம் நிறைவேற்றப்பட, அவரிடத்தில் நாம் விசாரிக்க வேண்டும். தாவீது தன் வாழ்வில், அரசாட்சியில் வீடு கட்டவோ, யுத்தம் செய்யவோ, ஆலயம் கட்டவோ எதுவானாலும் தேவ சித்தம் நிறைவேறும்படியாக ஜெபித்து விசாரித்தான் நம் ஆண்டவராகிய இயேசுவும் ஜெபித்து, ஜெபித்துதான் தேவ சித்தத்தை நிறைவேற்றினார்.

அடுத்ததாக **"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்"** இந்த வார்த்தைகள் அனுதினமும் நாம் தேவனைச் சார்ந்து வாழ வேண்டும். எத்தனை ஆசீர்வாதங்கள் தேவன் தந்திருந்தாலும் அனுதினமும் அவரது கிருபையின்றி நாம் வாழ முடியாது. காலைதோறும் அவர் கிருபை புதிதாய் இருக்கிறதல்லவா? ஆகவே நாம் அவரையே சார்ந்து வாழ்வோம்.

அடுத்ததாக, "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்", கர்த்தருடைய ஜெபத்தில் மிக முக்கிய பகுதியை இயேசு இங்கு கற்றுத் தருகிறார். மன்னிப்பு என்ற விலையேறப் பெற்ற ஈவை கிருபையாக தேவன் நமக்கு தந்துள்ளார். ஆனால், அதே மன்னிப்பை நாம் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்போது தான் பூமியில் சமாதானமும், அன்பும் பெருகும். தேவனுடைய ராஜ்யம் வளர்ச்சியடையும். கிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னித்தது போல, நாமும் பிறரை மன்னிக்கவேண்டும். அவைகளை கிறிஸ்து மறப்பதுபோல நாமும் மறக்கவேண்டும். ஒரு வேளை நாம் மன்னிக்காவிட்டால் இந்த ஜெபம் இப்படியாக ஏறெடுக்கப்படும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்காதது போல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியாதிரும் என்று நாம் அறிக்கை செய்பவர்களாகிவிடுவோம். கிறிஸ்துவால் மன்னிக்க முடியாத பாவங்கள் எதும் கிடையாது. நாமும் மன்னிப்போம். மறப்போம். கிறிஸ்துவின் அன்பினை வெளிப்படுத்துவோம்.

அடுத்தபடியாக, "எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்து கொள்ளும்". கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின்பு, கிறிஸ்துவுக்காக வாழும் வாழ்க்கை

பாதையிலும், ஊழியப்பாதையிலும் நமக்கு உபத்திரவங்கள் உண்டு. சோதனைகளும் உண்டு. பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது தேவன் நமக்கு இரட்சிப்பை கட்டளையிடுகிறார். **“அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்க உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்”** எபிரேயர் 2:18 கிறிஸ்து நமக்கு உதவி செய்கிறார். யாபேசின் ஜெபத்தை கவனியுங்கள். **“தேவரீர் என்னை ஆசீர்வதித்து , என் எல்லையை பெரிதாக்கி, உமது கரம் என்னோடு இருந்து, தீங்கு என்னை துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும்”.** (1நாளா 4:10) நாம் பிதாவை நோக்கி கருத்தாய் இயேசுவினிடத்தில் ஜெபிக்கும் போது, யாபேசின் ஜெபத்தை கேட்டு, வேண்டிக் கொண்டதை அருளிச் செய்த தேவன் நம் ஜெபத்தை கேட்டு நமக்கும் தீமைகள், சோதனைகள் இவைகளை நீக்கிப் போட்டு நமக்கு தெய்வீக பாதுகாவலையும், ஆசீர்வாதங்களையும் கட்டளையிடுவார்.

கடைசியாக, எல்லா கனமும், மகிமையும் அவருக்கே செலுத்தும்படியாக, **“ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே“** என்று தேவனுக்கே மகிமை செலுத்துவோம். நம் ஜெபித்தை கேட்டும் தேவனிடமிருந்து இயேசுவின் நாமத்தில் விசுவாசத்துடன் பெற்றுக் கொள்வோம் என்று நம்புவோம். ஆமென் அல்லோலுயா!


## ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை.

நாள்
**12.03.2011, சனிக்கிழமை**

நேரம்
**மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை**

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*தேவ செய்தி :* **சகோ. T. ஜார்ஜ்,**
(Jesus Delivers Ministries, Kulasekaram)

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை, Cell : 94876-89869,**
**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

# *Jesus Prayed*

He prayed upon the mountain,
He prayed for you and me,
He prayed in humble dwellings,
He prayed beside the sea.

He prayed in early morning,
Prayed with all His might,
He prayed at noonday and at dusk,
He prayed all tho' the night.

He prayed for those whe scorned Him,
For those who killed Him, too,
He prayed, "Father forgive them;
They know not what they do."

He prayed when He was lonely,
He prayed when He was sad,
He prayed when He was weary,
He prayed when He was glad.

He prayed for those in sorrow,
He prayed for those in sin,
He prayed for those in trouble
That they might come to Him.

- D.W.L.

## 15.03.2011 அன்று பிறந்த நாள் காணும்

# சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களை

## வாழ்த்துகிறோம்....



***சகோதரி வஹிதா தேவதாஸ்*** அவர்கள் தாயின் கர்ப்பத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பாத்திரம். இவர் ***சகோ. தேவதாஸ்*** அவர்களுக்கு தேவன் தந்த பரம தரிசனப்பணியான பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் மிஷனெரிப் பணியிலே ஒரு அப்போஸ்தலப் பணியை நிறைவேற்றுவதிலும், ஆயிரம், ஆயிரம் பீல் ஆதிவாசி குடும்பங்களுக்கும், சுமார் 500 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கும் ஆவிக்குரிய தாயாக அன்பையும், அரவணைப்பையும், ஆலோசனைகளையும், தேவனுடைய வழிநடத்துதல்களையும், தேவனுடைய வல்லமையையும் அறிவித்து நடத்திச் செல்லுகிற ஒரு அன்பு சகோதரியாவார்.

தேவன் இந்நாட்களில் தம் தீர்க்கதரிசன அபிஷேகத்தை அளவில்லாமல் இவர்கள் மேல் ஊற்றியிருக்கிறார். மார்ச் 15ம் தேதி (15.03.1963) "பிறந்த நாள்" காணும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களை அந்நாளில் ஜெபித்து ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறோம். 48 வருடங்கள் கர்த்தரின் நாமத்தின் மகிமைக்காக வாழ்ந்து வருகிறார்கள்.

சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் தொலைபேசி எண் : **09376018006**

## உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தாலோ, மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் உங்களது முகவரியில் திருத்தங்கள், மாற்றங்கள் அல்லது புது முகவரியை உடனடியாக தெரிவிக்க அன்பாய் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

***சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். யோவேல் 2 : 15***

# ஷாலோம் உபவாச ஜெபம்

நாள்

**05.03.2011**
**சனிக்கிழமை**

நேரம்

**காலை 9.30 மணி முதல்**
**மதியம் 1.00 மணி வரை**

இடம்

**ஷாலோம் தலைமை அலுவலகம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8.



தேவ செய்தி :

## சகோ. அற்புதராஜ் மர்காஷியஸ்

(அன்பு பகிர்வு இயக்கம், தூத்துக்குடி.)


***தேசத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும்,***
***குடும்பங்களுக்காகவும் ஜெபிக்க உபவாசத்துடன் குடும்பமாக***
***அனைவரும் கலந்து கொண்டு ஜெபிக்க***
***அன்பாய் அழைக்கிறோம்.***

***உங்களது ஜெபக்குறிப்புகளுக்காக விசேஷமாக ஜெபிக்கப்படும்!***


குறிப்பு : ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை தோறும் இந்த உபவாச ஜெபம் நடைபெறும்.

தொடர்பு :

**அன்பு பகிர்வு இயக்கம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8.
போன் : 0461 – 2375468, செல் : 9345675468



# தேர்தலுக்கான ஜெபக்குறிப்புகள்



*என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்தி–ருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன். (2 நாளா. 7:14)*

*நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந் தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். (எசே. 22:30)*

1. **அநியாயம் செய்வது ராஜாக்களுக்கு அருவருப்பு. (நீதி. 16:16) நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும்.**

   அநியாயம் செய்கிற ராஜாக்கள் அகற்றப்பட நீதி செய்கிறவர்களை தேவன் ஆளுகைக்குக் கொண்டு வர ஜெபிப்போம். **நீதி ஜனத்தை உயர்த்தும். (நீதி 14:34)**

2. **ராஜாவின் முன்னின்று துஷ்டரை நீக்கிவிடு அப்பொழுது அவனுடைய சிங்காசனம் நீதியினால் நிலை நிற்கும். (நீதி. 25:5)**

   ராஜாக்களாய் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களோடே, துஷ்ட மனிதர்களின் ஐக்கியமும், ஆலோசனையும் இராதபடி நிர்மூலமாக்கப்பட கருத்தாய் ஜெபிப்போம்.

3. **ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய் விசாரிக்கிற ராஜாவின் சிங்காசனம் என்றும் நிலைபெற்றிருக்கும். (நீதி. 29:14)**

   ஏழைகளுக்கு நியாயம் செய்கிற உண்மையுள்ள ராஜாவை கர்த்தர் தேசத்தில் எழுப்பித் தரும்படியாக ஜெபிப்போம்.

4. **நியாயத்தினால் ராஜா தேசத்தை நிலை நிறுத்துகிறான். பரிதானப் பிரியனோ அதைக் கவிழ்க்கிறான். (நீதி. 29:4)**

   பரிதானம் (லஞ்சம்) வாங்குகிறவர்களை கர்த்தர் ஆளுகைக்கு வரவிடாதபடி, தோற்கடிக்கும்படியாக ஜெபிப்போம்.

5. **திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்கு தகுதியல்ல. (நீதி. 31:4)**

   மதுபானப் பிரியர்கள் ஆட்சிக்கு வராதபடி, கர்த்தர் அகற்றும்படி கருத்தாய் ஜெபிப்போம்.

6. **அரசாளுகிற அடிமையினிமித்தம் பூமி சஞ்சலப்படுகிறது. (நீதி. 30:21&22)**

   பாவ அடிமைத்தனத்திலுள்ளவர்கள் ஆட்சிக்கு வராதபடி ஜெபிப்போம்.

7. **என்னாலே ராஜாக்கள் அரசாளுகிறார்கள், பிரபுக்கள் நீதி செலுத்துகிறார்கள். (நீதி. 8:15)**

தேவனே ஆளுகையை கொடுக்கிறவர் என்பதை அறியாமல், தவறான வழியில் பணத்தைக் காட்டி, ஜனங்களைத் தன்பக்கம் இழுக்கிறவர்கள் வெற்றி பெறாதபடி ஜெபிப்போம்.

8. **பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான். பரிதானங்களை (லஞ்சம்) வெறுக்கிறவனோ பிழைப்பான். (நீதி. 15:27) துன்மார்க்கன் நீதியின் வழியைப் புரட்ட, மடியிலுள்ள பரிதானத்தை வழங்குகிறான். (நீதி. 17:23)**

பொருளாசை, பண ஆசை உள்ளவர்கள் ஆளுகைக்கு வராதபடி ஜெபிப்போம். ஏனென்றால் (பரிதானங்களை) லஞ்சப்பணத்தை வெறுக்கிறவர்கள் தான் பிழைக்க முடியும்.

9. **தயையும், சத்தியமும் ராஜாவைக் காக்கும், தயையினாலே தன் சிங்காசனத்தை நிற்கப் பண்ணுவான். (நீதி. 20:28)**

ஏழைகள் மீது தயவும், தன் வாழ்க்கையில் உண்மையுமுள்ளவர்களை கர்த்தர் ஆளுகைக்கு கொண்டு வர ஜெபிப்போம்.

10. **ஞானமுள்ள ராஜா துன்மார்க்கரைச் சிதறடித்து, அவர்கள் மேல் உருளையை உருட்டுவான். (நீதி. 20 : 26)**

துன்மார்க்கமான காரியங்களை தேசத்தை விட்டு முற்றிலும் அகற்றுகிற ஞானமுள்ளவர்களை கர்த்தர் ஆளுகைக்குக் கொண்டு வர ஜெபிப்போம்.

11. **தேசத்தின் பாவத்தினிமித்தம் அதின் அதிகாரிகள் அநேகராயிருக்கிறார்கள்; புத்தியும் அறிவுமுள்ள மனுஷனாலோ அதின் நற்சீர் நீடித்திருக்கும். (நீதி. 28:2)**

புத்தியும் அறிவுமுள்ள மனுஷனை கர்த்தர் ஆளுகைக்குக் கொண்ட வரும்படி ஜெபிப்போம்.

12. **ஏழை ஜனங்களை ஆளும் துஷ்ட அதிகாரி கெர்ச்சிக்கும் சிங்கத்துக்கும் அலைந்து திரிகிற கரடிக்கும் ஒப்பாயிருக்கிறான். (நீதி. 28:15)**

கெர்ச்சிக்கிற சிங்கம் போ–ருக்கிற துஷ்ட அதிகாரிகள் அகற்றப்பட நீதியுள்ளவர்களை கர்த்தர் ஆளுகைக்குக் கொண்டு வர ஜெபிப்போம்.

13. **பிரபு புத்தியீனனாயிருந்தால் அவன் செய்யும் இடுக்கண் மிகுதி பொருளாசையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான். (நீதி. 28:16)**

புத்தியீனமுள்ளவர்கள் வெற்றிபெறாதபடி கர்த்தர் தடுத்து நிறுத்த ஜெபிப்போம்.

14. **நீதிமான் ஏழைகளின் நியாத்தைக் கவனித்தறிகிறான். (நீதி. 29:7)**

ஏழைகளுக்கு நியாயம் செய்கிற நீதிமான்கள் வெற்றிபெற ஜெபிப்போம்.

15. **நியாயத்தினால் ராஜா தேசத்தை நிலை நிறுத்துகிறான்; பரிதானப் பிரியனோ அதைக் கவிழ்க்கிறான். (நீதி. 29:4)**

பரிதானப் பிரியர்கள் தேசத்தைக் கவிழ்க்காதபடி, நியாயத்தினால் தேசத்தை நிலைநிறுத்தும்படியானவர்களை கர்த்தர் ஆளுகைக்குக் கொண்டு வரும்படியாக ஜெபிப்போம்.

16. **அவருடைய இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டபோது, அவர் தமது சிங்காசனத்தி–ருந்து தள்ளப்பட்டார். உன்னதமான தேவன் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமானவனை அதின் மேல் அதிகாரியாக்குகிறார் என்று அவர் உணர்ந்து கொள்ளுமட்டும் மாடுகளைப் போல் புல்லை மேய்ந்தார். (தானி. 5:20,21)**

இருதய மேட்டிமையுள்ளவர்களை கர்த்தர் அகற்ற, தேவனே ஆளுகை செய்து, அதிகாரியாக்குகிறார் என்பதை உணருகிறவர்களை கர்த்தர் ஆளுகைக்கு கொண்டு வர ஜெபிப்போம்.

17. **1 ராஜாக்கள் 11:6–11 ன்படி,** விக்கிரகங்களுக்கு ப–பீடங்களைக் கட்டி, ஜனங்களை மோசம் போக்குகிறவர்கள் ஆளுகைக்கு வராதபடி கர்த்தர் தடை செய்யும்படி ஜெபிப்போம்.

18. **நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் ஜெபிப்போம். 1 (தீமோ. 2:2)**

1. நல்லொழுக்கம் தேசத்தில் காணப்படவும் (மதுபானம், லாகிரி வஸ்துக்கள் அழிக்கப்படவும்)

2. கலகமில்லாத அமைதி உண்டாகவும் (தீவிரவாதம், மதவாதம் முடிவு கட்டப்படவும்)

3. பயபக்தி ஜனங்களுக்குள் காணப்பட (நல்ல சட்டங்கள் இயற்றப்பட்டு, ஜனங்கள் அதன்படி நடக்கவும்) ஜெபிப்போம்.

19. **யோசபாத் பாகால்களைத் தேடாமல், கர்த்தரைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், தேவனுடைய கற்பனையின்படி நடந்து கொண்டான், ஆகையால் கர்த்தர் அவன் கையில் ராஜ்ய பாரத்தைத் திடப்படுத்தினார். (1 நாளா. 17:3–5)**

விக்கிரகங்களைத் தேடாமல், கர்த்தரையும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும் தேடி கர்த்தருடை கற்பனைகளின்படி நடக்கிறவர்களையும் கர்த்தர் ஆளுகைக்குக் கொண்டு வர ஜெபிப்போம்.

20. தேர்தல் எந்த விதமான வன்முறையும் இல்லாமல், அமைதியான முறையிலும், நியாயமான முறையிலும் நடைபெற ஜெபியுங்கள். மேலும் அனைவரும் தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

# ஜெபிக்க வேண்டுகிறோம்...



- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் வசிக்கும் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்கள் அனைவரும், நமது தலைமுறையில் இரட்சிக்கப்பட்டு தேவனண்டையில் திரும்ப ஜெபியுங்கள்.
- **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus** **(MBA II Year)** **Brighton Shalom** **(B.Tech Media Final Year)** **Joy Shekinah** **(Doing M.B.B.S.,)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- நமது பணித்தளங்களில் உள்ள ஒவ்வொரு சபையிலும் உள்ள மூப்பர் பெண்களுக்கான சிறப்பு கூடுகைகள் நடத்தப்படவுள்ளன. இந்த கூடுகைகளை தேவன் ஆசீர்வதிக்கவும், இதில் அநேக பெண்கள் பங்கு பெறவும், அவர்களை தேவன் சாட்சியாக நிறுத்தவும் ஜெபியுங்கள்.
- இந்த மாதம் அரசு தேர்வுகள் எழுதவிருக்கும் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காக விஷேசமாக ஜெபியுங்கள். அவர்களுக்கு தேவன் நல்ல ஞானத்தையும், சுகத்தையும் ஞாபக சக்தியையும் தர ஜெபியுங்கள், அவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற்று சமுதாயத்தில் உயரவும் ஜெபியுங்கள்.
- வருகின்ற மே மாதம் நமது பணித்தளங்களில் வழக்கம்போல் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு CBC (Children Bible Class) நடத்த ஜெபித்து தீர்மானித்துள்ளோம். இதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதை தேவன் ஆசீர்வதிக்கவும், அநேக சிறுவர்கள் பங்கு பெற்று ஆசீர்வாதங்களைப் பெறவும், ஜெபியுங்கள்.
- நமது ஷாலோம் தலைமை அலுவலகத்தில் வைத்து இந்த மார்ச் மாதத்தி–ருந்து ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை தோறும் உபவாச ஜெபம் நடத்த ஜெபித்து தீர்மானித்துள்ளோம். இதில் அநேகர் பங்கு பெறவும், இந்த ஜெபம் ஊழியங்களுக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள்.
- மார்த்தாண்டத்தில் நமது ஷாலோம் கிளை அலுவலகத்தில் வைத்து மாதந்தோறும் இரண்டாம் சனி தோறும் நடைபெற்று வரும் ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகையை தேவன் ஆசீர்வதிக்கவும், இன்னும் அதிகமாக தேவ பிள்ளைகள் பங்குபெறவும், இந்த கூடுகையின் மூலம் அநேகர் மிஷனெரி தரிசனம் பெறவும் ஜெபியுங்கள்.
- தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும், குஜராத் பணித்தள அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

# ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

30.01.2011 அன்று மாலை 6.00 மணியளவில் தூத்துக்குடி மில்லர்புரம், **ரூபவதி பேலஸில்** வைத்து **"ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை"** –யை தேவன் மிகவும் சிறப்பாக நடத்தித் தந்தார். **சகோ. வின்ஸ்டன் பாலசிங்** (தூத்துக்குடி) அவர்கள் கூடுகையின் ஆரம்ப ஜெபத்தினை ஏறெடுத்து, நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்கள். **சகோ. சாம் குணசீலன்** (மேலாளர், ஷாலோம் தலைமை அலுவலகம்) அவர்கள் வரவேற்புரையாற்றினார். **Pr. சார்லஸ் பூபாலன்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்தித் தந்தார்கள். ஆராதனை வேளையில் தேவனுடைய பிரசன்னம் இறங்கி வந்தது.

இந்தக் கூடுகையில் சிறப்பம்சமாக நமது ஷாலோம் பணித்தளங்களில் தங்களை ஆண்டவருக்காக அர்ப்பணித்து ஊழியம் செய்து வரும் ஊழியர்கள் மூன்று பேர் குடும்பமாக பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். ஊழியர்கள் மற்றும் ஊழியர்களைத் தாங்குவோர் விபரங்கள் :

❖ **சகோ. மணீஷ் மேடா (மோலான், இராஜஸ்தான்)**
**தாங்குவோர் : Dr. கிரிஜா (கோவில்பட்டி) அவர்கள் குடும்பத்தினர்,**

❖ **சகோ. ராகேஷ் பாரியா (லுனாவாடா, இராஜஸ்தான்)**
**தாங்குவோர் : Mrs. பேபி சந்திரா (தூத்துக்குடி) அவர்கள் குடும்பத்தினர்,**

❖ **சகோ. தினேஷ் கோதா (சர்வானி, இராஜஸ்தான்)**
**தாங்குவோர் : Mr. ராஜ்குமார் (தூத்துக்குடி) அவர்கள் குடும்பத்தினர்.**

மூன்று ஊழியர்கள் குடும்பமும் இணைந்து பீல் மக்கள் கலாச்சாரத்தின்படி பாடல்களைப் பாடி தேவனை மகிமைப்படுத்தி, தங்கள் சாட்சிகளை பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் இந்த ஊழியர்களின் பிரதிஷ்டைக்காக **Pr. கனகராஜ்** (கிறிஸ்தவ விசுவாச ஐக்கிய சபை, தூ–டி.) அவர்கள் ஜெபம் செய்தார்கள் பிரதிஷ்டை வேளையின்போது ஆவியானவர் அபரிவிதமாக மூன்று ஊழியர்கள் குடும்பத்தையும் அபிஷேகம் செய்து, புதிய தரிசனங்களைக் கொடுத்தார்.

பிரதிஷ்டையைத் தொடர்ந்து **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் பணித்தள செய்தியையும், பணித்தள சாட்சிகளையும் பகிர்ந்து கொண்டார்கள். இதன் மூலம் வந்திருந்த அனைவருக்கும் தேவன் மிஷனெரி தரிசனத்தையும், மிஷனெரி ஊழியங்களைக் குறித்த பாரங்களையும், நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்த ஒரு பாரத்தையும், ஊழியங்களுக்காக ஜெபிக்க தூண்டுதலையும் தேவன் கொடுத்தார்.

**சகோ. அற்புதராஜ் மார்காஷியஸ்** அவர்கள் அர்ப்பணிப்பின் வேளையை நடத்தினார்கள். ஜனங்களை தேவனுக்காவும், ஊழியங்களுக்காகவும், ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், நமது ஷாலோம் ஊழியங்களைத் தாங்கவும் அர்ப்பணிக்கும்படி ஜனங்களை வழி நடத்தினார்.

காணிக்கைக்கான சிறப்பு பாடலை **சகோ. ஜான்சன் செல்வக்குமார்** (பாளை) அவர்கள் குடும்பமாக பாடினார்கள். காணிக்கைக்கான சிறப்பு ஜெபத்தினை **Pr. சார்லஸ் பூபாலன்** அவர்கள் ஏறெடுத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து **Rt. Rev. Dr.V. தேவதாஸ்** அவர்கள் **"இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்...** (ஏசாயா 43:19) என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் கொண்டு வாக்குத்தத்த செய்தி கொடுத்தார்கள். இந்த செய்தி வந்திருந்த ஜனங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. இதன் மூலம் புதிய தரிசனத்தையும், புதிய அபிஷேகத்தையும், பதிய கிருபைகளையும் பெற்றுக் கொண்டனர். மேலும் ஜெப நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் அபிஷேகத்தை அளவில்லாமல் ஊற்றினார். முடிவு ஜெபம் மற்றும் ஆசீர்வாதம், **Pr. எட்வர்ட் சாம்ராஜ்** அவர்கள் ஏறெடுத்தார்கள்.

இந்தக் கூடுகையை சிறப்பாக நடத்தி தந்தமைக்காகவும், தேவைகளை சந்தித்து வழிநடத்தியமைக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். மேலும் இந்த கூடுகைக்காக ஜெபித்த, உழைத்த ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகிறோம். தேவன்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்!

# C.S.I. கால்டுவெல் நினைவு ஆலத்தில் நடைபெற்ற (கால்டுவெல் காலனி, தூத்துக்குடி)

# சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை ஆராதனை



மிஷனெரி சாட்சி வேளை



அர்ப்பணிப்பின் வேளை



சபைகுரு & ஷாலோம் பிஷப்



சபை மக்கள்




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

தூத்துக்குடி, கால்டுவெல் காலனியில் அமைந்துள்ள C.S.I. கால்டுவெல் நினைவு ஆலயத்தில் வைத்து கடந்த **30.01.2011** அன்று ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள், சகோ. சஞ்சய் ராட்டுவா (தேவ்கட், குஜராத்), சகோ. கேம்சந்த் J. குண்டியா ஆகியோர் சபை குரு Rev. Dr. P. செல்லப்பா அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். நமது பிஷப் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள் மிஷனெரி செய்தி கொடுத்தார்கள்.

ஷாலோம் ஊழியங்களை நேசித்து, ஊழியர்களை ஏற்று பிரதிஷ்டை செய்த சபை குரு Rev. Dr. P. செல்லப்பா அவர்களுக்கும் மேலும் சபையிலுள்ள கமிட்டி உறுப்பினர்களுக்கும், சபை விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



## நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்து

# சகோ. மோகன் சி. லாசரஸ்

அவர்கள்....

இயேசு நல்லவர். அவர் ஜனங்களை நேசிக்கிற ஒரு ஆண்டவர். இராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம் இந்த மூன்று மாநிலத்திலும் பீல் என்கிற ஒரு ஆதிவாசி மக்கள் சுமார் 1 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் சுபாவத்தின்படி பயங்கரமான குணமுள்ளவர்கள். வில், அம்புகளை வைத்து இன்றைக்கும் சண்டையிடும் பழக்கமுடையவர்கள். சில கிராமங்களில் திருடுவதுதான் அவர்களுடைய பரம்பரை தொழிலாகும். போலீஸ் கூட இவர்களுடைய கிராமங்களுக்கு வர பயப்படும். சாராயம் காய்ச்சுவது, குடிப்பது, வெறிப்பது, மனம்போல் வாழ்வது அதுதான் அவர்களுடைய வாழ்க்கை. அவர்கள் ஆவி வணக்கம் உள்ளவர்களாய் காணப்பட்டார்கள். அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு தங்களுடைய வாழ்க்கையில் அடிமைத்தனத்திலும், வேதனையிலும் வாழ்ந்தவர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் மந்திரவாதிகளே அந்த மக்களை அடிமைப்படுத்தி அவர்கள் வாழ்க்கையை தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் இந்த சுவிசேஷத்தை அன்பு சகோ. தேவதாஸ் அவர்களும் அவர்கள் மனைவி வஹிதா தேவதாஸ் அவர்களும் இந்த கிராமங்களுக்குக் கொண்டு வந்தபடியால் இருளில் இருக்கிற இந்த மக்கள் இன்றைக்கு இந்த வெளிச்சத்தைக் கண்டிருக்கிறார்கள். திருடுவதையும் கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொண்ட ஏராளமான மக்கள் இரட்சிக்கப்பட்டு, ஆண்டவருடைய பிள்ளைகளாய் மாறியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவின் பிள்ளைகளாய் மாறி, இருளிருந்து வெளிச்சத்தைக் கண்டு மகிழ்ந்திருப்பதை பார்க்கும் போது உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. சாராயம் காய்ச்சி விற்பதும் குடிப்பதுமே தொழிலாய் கொண்டிருந்த மக்கள் இன்றைக்கு அதையெல்லாம் விட்டு விட்டு பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறதை பார்க்க முடிகிறது. சுவிஷேசம் இயேசு கிறிஸ்து என்கிற சுவிசேஷம் இந்த மக்களுடைய வாழ்க்கையை மாற்றியிருக்கிறது.

அவர்களின் ஊழியத்தின் விளைவாக இன்றைக்கு ஏராளமான மக்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாய் மாறியிருக்கிறார்கள. ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். 600க்கும் மேற்பட்ட சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 16 ஆண்டுகளுக்கு முன்பாக முதன் முதலாக ஷாலோம் மிஷெனரி ஊழியத்தின் மூலமாக இவர்கள் மத்தியில் ஊழியத்திற்காக நான் கடந்து வந்தேன். அப்பொழுது இந்த மக்கள் மீது ஆண்டவர் வைத்திருந்த விசேஷித்த அன்பை என்னால் பார்க்க முடிந்தது. ஆகவே ஆண்டவர் இந்த மக்களுக்காக விசேஷமாக ஜெபிக்கவும், இவர்கள் மத்தியிலே நடக்கிற ஊழியத்தைத் தாங்கவும் எனக்குள்ளே விசேஷமான பாரத்தை உண்டாக்கினார். இவர்கள் மத்தியிலே ஊழியத்திற்கு வரும்பொழுதெல்லாம் என் உள்ளம் அதிகமாய் மகிழ்ச்சியடைகிறது. இந்த முறையும் குஜராத்திலே வயல்வெளியிலே கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கூடி வந்தார்கள். தமிழ்நாட்டைப் போல இங்கு விளம்பரங்கள் கிடையாது, நோட்டீஸ் கிடையாது ஒரு அறிவிப்பும் கிடையாது. இருக்கிற சபைகளில் மாத்திரம் இப்படிப்பட்ட ஒரு கூட்டம் நடக்கப்போகிறது என்று சொல்லப்பட்டது. எத்திசையிலும் இருந்து பத்தாயிரம் மக்கள் கூடி வந்து விட்டாரக்ள். மத்தியப்பிரதேசம் மாநிலத்திலும் ஒரு வனாந்திரமான பகுதியில் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஐயாயிரத்திற்கும் அதிகமான மக்கள் வந்து கூடிவிட்டனர். 7மைல், 8மைல், 10மைல் தூரம் அவர்கள் வசனத்தைக் கேட்க தாகத்துடன் நடந்தே வந்ததைக் கண்டபோது என் உள்ளம் இந்த மக்களுக்காக பாரம் கொண்டது. எவ்வளவு தாகத்தோடு ஆண்டவருடைய வசனத்திற்குக் காத்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தங்களுடைய வாழ்க்கையிலும் அற்புதம் செய்ய வேண்டும் என்று எவ்வளவு தாகத்தோடு இந்த மக்கள் தேடி வருகிறார்கள். அவர்கள் தாகத்தையும், ஆண்டவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிகிறதையும் பார்க்கும்போது என் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. இயேசு கிறிஸ்து இந்த மக்களை விசேஷமாய் நேசிக்கிறார்.

ஆகவே இந்த மக்கள் ஆராதிப்பதற்கு ஆலயங்களைக் கட்ட வேண்டுமென்று ஆண்டவர் கட்டளையிட்டார். 200, 300 பேர் கூடி மரத்தடியில் வெயில் உட்கார்ந்து தவறாமல் ஆண்டவரை ஆராதித்தார்கள். இன்றைக்கு அவர்களுக்கு ஆலயங்கள் கட்டப்படும்பொழுது அவர்கள் உள்ளம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறது. இன்றைக்கு அவர்களுக்கு கட்டப்பட்ட ஒரு புதிய ஆலயத்திற்கு முன்பாக நின்று உங்களோடு நான் பேசுகிறேன். இந்த ஆலயப் பிரதிஷ்டையில் பங்கு பெற்று அவர்களுக்கு ஆண்டவருடைய வசனத்தை சொல்லி ஜெபித்தது என் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு நாள்.

இந்த ஏழை ஜனங்கள் இயேசுவின் மேல் வைத்திருக்கிற அன்பையும், விசுவாசத்தையும் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். இந்த ஜனங்கள் மூலமாக பலத்த ஒரு காரியத்தை ஆண்டவர் செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன். இவர்களுடைய முழு மக்களும் ஆண்டவரை அறிந்து கொள்ளவும் இவர்கள் மூலமாய் இந்திய தேசத்திலே ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகவும் இவர்கள் தேவன் இந்தியாவின் வடபகுதியிலே வல்லமையோடு பயன்படுத்துவார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

ஆண்டவர் இந்த ஜனத்தை தெரிந்து கொண்டிருக்கிறபடியால் இவர்கள் இந்த தேசத்திற்கு ஆசீர்வாதமாய் மாறுவார்கள் என்று விசுவாசிக்கிறேன். அதற்காக இந்த மக்களுக்காக கருத்தாக நாம் ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கிறது மாத்திரமல்ல இந்த மக்கள் இன்னும் ஆண்டவருடைய அன்பிலே வளருவதற்கும் இந்த ஏழை மக்கள் இன்னும் ஆண்டவருக்குள் நிலைத்து நிற்பதற்கும் அவர்களுக்காக ஏதாவது நாம் செய்ய வேண்டும். ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கலாம். அவர்கள் சமுதாயத்திலே உயந்த நிலைக்கு வருவதற்கு பல விதங்களிலே உதவி செய்யலாம். நாம் சேர்ந்து செயல்படுவோம். தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டுவோம். பரலோகம் மகிழந்து களிகூறும். பரலோகத்திலே உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். ஆமென்!



# ஷாலோம் மிஷனெரி தரிசன கூடுகை, தூத்துக்குடி (30.01.2011)



சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை நேரம் ஜெபம் : போதகர் கனகராஜ் அவர்கள்



பணித்தளச் செய்தி : சகோதரி. வஹிதா தேவதாஸ்



மிஷனெரி செய்தி : Rt. Rev. Dr. V. தேவதாஸ்



கூடியிருந்த தேவ ஜனங்கள்






பாடல் மற்றும் ஆராதனை நடத்திய Pr. சார்லஸ் அவர்கள்



நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய சகோ. வின்ஸ்டன் பாலசிங் அவர்கள்




செயல்படும் நேரத்தில் சகோ. அற்புதராஜ் மர்காஷியஸ் அவர்கள்



சுதேச ஊழியர்களைக் குறித்த அறிமுகம் & சாட்சிகள் பகிர்வு வேளை



ஊழியருக்கு அன்பளிப்புகள் வழங்கும் சகோ. ராஜ் குமார் குடும்பத்தினர்



ஊழியருக்கு அன்பளிப்புகள் வழங்கும் பேபி சந்திரா குடும்பத்தினர்



ஊழியருக்கு அன்பளிப்புகள் வழங்கும் Dr. கிரிஜா அவர்கள் குடும்பத்தினர்




சிறப்புப் பாடல் சகோ. ஜான்சன் செல்வக்குமார் குடும்பம்

சுதேச ஊழியர் சாட்சி

# Rev. முகேஷ் வாசுனியா

## மத்தியப்பிரதேசம்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! என்னுடைய பெயர் முகேஷ்பாய் வாசுனியா. நான் மத்தியப்பிரதேசம், ஜாபுவா மாவட்டத்திலுள்ள சொக்வாடா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் வசிக்கும் பகுதி திருடர்களும், கொள்ளையர்களும் நிறைந்த ஒரு பகுதியாகும். எங்கள் கிராம வாசிகள் சாராயம் காய்ச்சி விற்பதிலும் மட்டுமல்ல குடித்து வெறிப்பதிலும் தேறினவர்கள்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்து நாங்கள் ஒன்றும் அறியாதவர்களாய் இருளிலே வாழ்ந்து வந்தோம். எங்களது வீட்டில் மக்காச்சோளம் அரைக்கிற இயந்திரம் இருந்தது அந்த இயந்திரம் சரியாக வேலை செய்யாதபடி பில்லிசூனியம் செய்திருந்தார்கள். மேலும் எனது தாயும் நோய்வாய்ப்பட்டிருந்தார். இவற்றிற்காக மந்திரவாதிகளை நம்பி ஏமாந்து போனோம்.

இந்த சூழ்நிலையில் எனது சித்தப்பா குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆராதனைக்கு செல்வது வழக்கமாக இருந்தது. எங்களையும் ஆலய ஆராதனைக்கு அழைப்பார் நாங்கள் மறுப்பு தெரிவித்து நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தோம். இறுதியில் வேறு வழியில்லாமல் எனது தாயின் நலத்திற்காக எனது சித்தப்பா ஒரு சுதேச ஊழியரை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தார். அந்த ஊழியரும் எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்தார். அந்த நேரத்திலேயே தேவன் எனது தாயாருக்கு முற்றிலும் சுகம் கொடுத்தார். மக்காச் சோளம் அரைக்கும் இயந்திரத்தில் இருந்த கோளாறுகளையும் தேவன் சரி செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! அதன் பின் 20.07.1997–ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக குடும்பமாக நாங்கள் ஏற்றுக் கொண்டோம். எனது சொந்த ஜனம் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரத்தை தேவன் தரவே, எனது வாழ்க்கையை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து, எனது கிராமத்தில் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், ஒவ்வொரு கிராமமாகச் சென்று இயேசு திரைப்படத்தைக் காண்பித்து மக்களை இயேசுவண்டை வழி நடத்தி வந்தேன், அநேக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். பின்பு சொக்குவாடா கிராமத்தில் ஆராதனை நடத்தவும், பெரிய ஆலயத்தைக் கட்டவும் தேவன் கிருபை செய்தார். மேலும் 20.11.2009 அன்று போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு தொடர்ந்து ஊழியம் செய்து வருகிறேன். எனக்காகவும் ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mr. Jeevakumar (M.S.F.)** Tuticorin.

# CBC (Children Bible Class - 2011)



ஒவ்வொரு ஆண்டும் நமது பணித்தளங்களில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான CBC நடத்தப்பட்டு வருகிறது.

2008ஆம் ஆண்டில் "இயேசுவே இரட்சகர்" என்றதலைப்பில் 17,000 சிறுவர்களும்
2009ஆம் ஆண்டில்"விசுவாசமே ஜெயம்" என்றதலைப்பில் 20000 சிறுவர்களும்,
2010ஆம் ஆண்டில் "நல்ல போதகர் இயேசு" என்றதலைப்பில் 25000 சிறுவர்களும்

பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதேபோல் இந்த ஆண்டும் வருகின்ற மே மாதம் "ஜீவ வார்த்தை" என்கிற தலைப்பில் 30000 சிறுவர்களுக்கு 600 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம்.

**இதற்கான தேவைகள்:–**

1. 600 ஆசிரியர்களுக்கான பயிற்சி கையேடுகள்
2. 30000 CBC புத்தகங்கள்.
3. Badge. (30000)
4. பாட்டு புத்தகங்கள் (10,000)
5. கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets)

**CBC** புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்றபொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 10/– வீதம் 30000 குழந்தைகளுக்கு ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். *மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ ஒரு குழந்தைக்கு ரூ. 10/– வீதம் உங்களால் முடிந்த அளவிலான குழந்தைகளுக்கு கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.*

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!




CBC பயிற்சி புத்தகங்கள்



CBC ஆசிரியர் பயிற்சியில்

**"மிகவும் சிறியவராகிய..... இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்"** *மத். 25:40*

# தலைமை அலுவலக ஊழியர்களின் பணித்தள வருகை



டிக்கிடி கிராம சபையில் கலாச்சார வரவேற்பு



சபை விசுவாசிகளுடன்



ஹிரோலா Compassion Project சிறுவர்களுடன்



பிஜல்புர் ஹாஸ்டல் சிறுவர்களுடன்



கங்கேலா சபையில் சிறப்பு செய்தி : சகோ. டேவிட்



சுதேச ஊழியர் மனைவிமார் கூடுகையில் விஷேச ஜெபம்



பிஷப் தேவதாஸ் மற்றும் வஹிதா தேவதாஸ் அவர்களுடன்



ஜாலோத், ஷாரோன் நினைவு மருத்துவமனையில் Dr. Sheju அவர்களுடன்

### ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களின் பணித்தள வருகையின் அறிக்கை

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

நமது ஷாலோம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தி–ருந்து, **சகோ. டேவிட்,** (Shalom Charity Mission) **சகோ. ஜெயபிரகாஷ்** (Magazine Department), **சகோதரி எபனேசர்** (Office Asst.) மற்றும் அவரது மகள் சிறுமி **கிறிஸ்டினா** ஆகியோர் குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடைபெறும் நமது ஷாலோம் பணித்தளங்களை பார்வையிட்டுத் திரும்ப தேவன் கிருபை செய்தார்.

அதன்படி நாங்கள் அனைவரும் ரயில் பயணத்தின் மூலம் 31.01.2011 அன்று இரவு 7.00 மணியளவில் குஜராத், தாகோதிலுள்ள நமது பணித்தள அலுவலகத்தை அடைந்தோம். அன்று விருந்தினர் தங்கும் இல்லத்தில் ஓய்வெடுத்துவிட்டு மறுநாள் 01.02.2011 முதல் பணித்தளங்களை பார்வையிட சென்றோம்.

01.02.2011 : காலை 9.30 மணிக்கு நமது பணித்தள அலுவலகத்தில் வழக்கமாக நடைபெறும் ஜெபத்தில் பங்கு பெற்றோம். அதன்பின் 11.00 மணியளவில் நமது பயிற்சிக் கூடத்தில் நடைபெற்ற ஊழியக்காரர்களின் மனைவிமார்களின் கூடுகையை பார்வையிட தேவன் கிருபை செய்தார். அந்தக் கூடுகையில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் ஆராதனை மற்றும் தேவ செய்தியளித்தார்கள். ஆராதனை வேளையின் போது ஆவியானவருடைய அசைவாடுதலை அதிகமாக உணர முடிந்தது. பெண்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டு, ஆடி, பாடி ஆராதனை செய்தனர். மேலும் சாட்சி வேளையில் இரு பெண்கள் தங்கள் பகுதியில் மரணமடைந்த இரண்டு பேரை தாங்களே ஜெபம் செய்து எழுப்பியதாக சாட்சி கூறியது எங்களை பிரமிப்பில் ஆழ்த்தியது.

அதன்பின் மாலை 3.00 மணியளவில் குஜராத், கங்கேலா கிராம சபையை பார்வையிட தேவன் கிருபை செய்தார். நாங்கள் வருவதற்காக அங்கு சிறப்பு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் அன்போடு வரவேற்று உபசரித்தார்கள். சகோ. டேவிட் அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். செய்திவேளையை தேவன் ஆசீர்வதித்தார்.

02.02.2011 அன்று காலை குஜராத், ஹிரோலா கிராம சபையையும், அங்கு Compassion Project மூலமாக நடைபெறும் ஆதிவாசி சிறுவர் பராமரிப்பு ஊழியத்தையும் பார்வையிட்டோம்.

அதன்பின் குஜராத், ஜாலோத்திலுள்ள ஷாரோன் நினைவு மருத்துவனையை பார்வையிடவும், Dr. Sheju அவர்களை சந்திக்கவும் தேவன் கிருபை செய்தார். அதன்பின் ராஜஸ்தானிலுள்ள, கோய்கா கிராமத்து சபையையும் அங்குள்ள நமது ஹாஸ்டலையும் பார்வையிட தேவன் கிருபை செய்தார். அன்று மதியம் ராஜஸ்தான், கும்புரா கிராம சபையை பார்வையிட தேவன் கிருபை செய்தார். அங்கும் நாங்கள் வருவதையொட்டி ஒரு சிறப்பு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் எங்களை மகிழ்ச்சியுடன் உற்சாகமாக வரவேற்று உபசரித்தனர். அந்தக் கூடுகையில் சகோதரி எபபேனசர் மற்றும் அவர்ருடைய மகள் இருவரும் சிறப்பு பாடல் பாடினர். சகோ. ஜெயபிரகாஷ் அவர்கள் செய்தியளித்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது.

அதன்பின் இராஜஸ்தான், பிஜல்பூர் கிராமத்திலுள்ள நமது கிராம சபையையும், அங்குள்ள நமது ஹாஸ்டல் மற்றும் பள்ளியையும் பார்வையிட்டோம். அங்கு தங்கி பயின்று வரும் சிறுவர்கள் அனைவரும் எங்களைக் கண்டவுடன் மகிழ்ந்து அனைவரும் எங்களுக்கு கைகொடுத்து வாழ்த்துக்கள் கூறி வரவேற்றது எங்களை நெகிழ்வுறச் செய்தது. அதன்பின் சகோ. டேவிட் அவர்கள் அந்த சிறுவர்களுக்கு சிறப்புக் கதைகள் கூறி, அவர்களை ஒழுக்கமான வாழ்விற்கும், ஜெப வாழ்விற்கும் வழிநடத்தினார்.

03.02.2011 அன்று காலை பணித்தள அலுவலக ஜெபத்தில் கலந்து கொண்டோம். அதன்பின் மத்தியப்பிரதேசம், அந்தர்வே–யா கிராம சபையையும், Compassion Projcet மூலமாக நடைபெறும் ஆதிவாசி சிறுவர் பராமரிப்பு ஊழியத்தையும் பார்வையிட்டோம். அதன்பின் டிக்கிடி கிராம சபைக்குச் சென்றோம். அங்கு எங்களுக்கு பீல் மக்களின் கலாச்சாரத்தின் படி மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சிறப்புக்

கூட்டத்தில் எங்களுடன் வந்திருந்த சகோ. கிருபா அவர்கள் செய்தியளித்தார்கள்.

அதன்பின் கட்வாடா கிராமத்திலுள்ள ஹால்டலை சென்று பார்வையிட சென்றோம். அங்குள்ள சிறுவர் மற்றும் சிறுமியர் உற்சாகமாக எங்களை வரவேற்றனர். அவர்களுக்கு சகோதரி எபனேசர் அவர்கள் சிறப்பு பாடல் மற்றும் மனப்பாட வசனங்களைக் கற்றுக் கொடுத்தார்கள்.

**04.02.2011** அன்று காலை பணித்தள அலுவலக ஊழியர்களுக்கான உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள தேவனை் கிருபை செய்தார். அதன்பின் அன்று மதியம் மத்தியப்பிரதேசம் ஹரிநகரிலுள்ள ஷாலோம் ஹாஸ்டல் சிறுவர்களை சந்திக்க தேவன் கிருபை செய்தார். அதன்பின் சகுவானி கிராம ஆலயத்தைப் பார்வையிடவும் தேவன் கிருபை செய்தார்.

**05.02.2011** அன்று நமது ஷாலோம் பயிற்சிக் கூடத்தில் வைத்து நடைபெற்ற மத்தியப்பிரதேசம் மாநிலத்திலுள்ள சுதேச ஊழியர்களுக்கான சிறப்புக் கூடுகையில் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். அந்த கூடுகையில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் சிறப்பு பாடல்கள் மற்றும் ஆராதனை நடத்தினார்கள். Rt.Rev.Dr.V. தேவதாஸ் அவர்கள் சிறப்பு செய்தியளித்தார்கள். ஆராதனைவேளையில் ஊழியர்கள் அனைவரும் உற்சாகமான நடனமாடி குதித்துப் பாடி தேவனை ஆராதனை எங்களை செய்தது மெய் சி–ர்க்கவைத்தது. அந்த ஆராதனையில் ஆவியானவரின் அளவில்லாத அபிஷேகத்தை எங்களால் உணரமுடிந்தது. அதன்பின் அன்று மாலை தாகோத்தி–ருந்து இரயில் பணம் மூலமாக திரும்பிவர தேவன் கிருபை செய்தார். தூத்துக்குடி ஷாலோம் தலைமை அலுவலகத்தில் ஊழியம் செய்து வரும் நாங்கள் இந்த பணித்தளங்களை பார்வையிடுவது இதுவே முதல் முறையாகும். பணித்தளத்தில் அநேக வேலைகளுக்கு மத்தியிலும் எங்களை உபசரித்து கனப்படுத்திய Rt.Rev.Dr.V. தேவதாஸ் அவர்களுக்காகவும், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுக்காவும் அவர்கள் குடும்பத்திற்காகவும் தேவனை துதித்து, தொடர்ந்து ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறோம். மேலும் பணித்தள அலுவலக ஊழியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

இங்கு நடைபெறும் ஊழியங்களைப் பார்த்து தேவனுக்காக நாங்கள் எங்களை அர்ப்பணித்தது அவர் சமூகத்தில் ஒன்றுமில்லை என்பதையும், நாங்கள் அவருடைய ஊழியத்தை செய்வது அவருடைய சுத்த கிருபைதான் என்பதையும் உணர்ந்து கொண்டோம். பணித்தளத்தில் ஆலயங்களையும், ஊழியர்களையும், விசுவாசிகளையும் பார்க்கும் போது ஆவியானவரின் அசைவாடுதலை எங்களால் உணர முடிந்தது. மேலும் அங்குள்ள ஊழியர்கள் கூறும் சாட்சிகளைக் கேட்கும்போது, அந்த இடத்தில் தேவன் மகிமைப்படுகிறார். இயேசு என்ற பெயரை ஒரு முறை கூட கேள்விப்படாமல் அந்தகாரத்தில் வாழ்ந்தவர்களை, தேவன் இரட்சித்து ஊழியர்களை தெரிந்தெடுத்தபோது தேவனுக்காக எவ்வளவோ போராட்டங்கள், பிரச்சனைகள், அடி, உதைகள், அனைத்தையும் மீறி தங்களது உயிரையும் துச்சமென்று எண்ணி, தங்களை அர்ப்பணித்து ஊழியம் செய்து வருவது எங்களை மிகவும் பாரப்படுத்துகிறது.

அங்குள்ள சிறுவர்களைப் பார்க்கும்போது, கல்வி என்றால் என்னவென்றே தெரியாத பீல் மக்களின் இளைய தலைமுறையில் 1000க்கும் அதிகமானோர், நமது ஷாலோம் ஹாஸ்டல் மற்றும் பள்ளிகள் மூலமாக கல்வியறிவு பெற்று சமுதாயத்தில் உயர்ந்து வருவதைப் பார்க்கும் போது தேவனை அதிகமாக துதிக்கிறோம். அங்கு சென்று ஒவ்வொரு ஹாஸ்டல்களிலும் சிறுவர்களை சந்திக்கும்போது, சிறுவர்கள் ஒவ்வொருவரும் எங்களை சந்தித்து கை குலுக்கி எங்களை அவர்கள் வாழ்த்தியது எங்களை இன்னும் உற்சாகப்படுத்தியது. இன்னும் இதே போல் அநேக சிறுவர்கள் படிப்பிற்ககாக காத்து நிற்கின்றனர். காலம் தாழ்த்தினால் அவர்களுடைய குழந்தைப் பருவம் முடிந்துவிடும், ஆகவே அவர்களுக்காக இன்னும் வேகமாக என்ன செய்யப்போகிறோம் என்ற பாரம் எங்களை நெருக்குகின்றது. இந்த பீல் மக்கள் மத்தியில் ஆவியானவர் வேகமாக செயல்படுவதைப் பார்க்கும்போது கர்த்தருடைய வருகை சமீபத்திருக்கிறது என்பதை உணர முடிகிறது. இந்த பீல் மக்களுக்காகவும், சிறவர்களுக்ககாவும் நாங்கள் செய்யும் ஊழியம் ஒன்றும் பெரிதல்ல இன்னும், இன்னும், இன்னும் அதிகமாக தேவனுக்காக இந்த பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்யவும், ஜெபிக்கவும் எங்களை அர்ப்பணிக்கிறோம். எங்களோடு இணைந்து இந்த இதைப் படித்துக் கொண்டிருக்கும் நீங்களும் எங்களுக்ககாவும், ஊழியங்களுக்ககவும் ஜெபிப்பீர்களா? மேலும் பிரயாணத்தில் எங்களையும் எங்கள் உடைமைகளையும், எங்களது உடல் நலனையும் பாதுகாத்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

## ஷாலோம் ஜெபக் கூடுகைகள்

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்றுவருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதம்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காய், ஊழியங்களுக்காய், ஊழியர்களுக்காய், குடும்பங்களுக்காய், ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதிஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

| ***மார்ச் மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*** | | | |
|---|---|---|---|
| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
| 04.03.2011 | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** 23-A. பிள்ளையார்கோவில் தெரு, ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 8. செல் : 99940–25696 |
| 05.03.2011 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 19.03.2011 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 30.03.2011 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது, தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |

“LojRoúUp Sm©dûLûYjÕ, LojRûWj Ru
Sm©dûLVôLd ùLôi¥Úd¡\ Uà`u Tôd¡VYôu.” **எரேமியா 17:7**

## விசுவாசம் என்பது என்ன?

இயேசுவே தேவன் என்றும் அவரால் சகலமும் கூடும் என்றும் நம்மில் பலருக்குத் தெரியும். ஆனால் அவைகளை நம் அனுபவத்தில் கொண்டு வர முயற்சிப்பதில்லை. எந்தத் துறையிலும் த்துவங்களும், அனுபவங்களும் கலந்திருக்கிறது. (Theory and Practical). தத்துவங்கள் மட்டும் நமது வாழ்க்கையானால் அது ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்ற பழமொழி போல்தான். நமது மூளை அறிவில் உள்ள தத்துவங்களை அனுபவத்தில் கொண்டு வருவதுதான் விசுவாசம்.

அமெரிக்க தேசத்திலே ஹென்னத் ஹேகின் என்ற தேவ மனிதன் இருக்கிறார். அவர் பிறக்கும் போது அவரின் இருதயம் சிறியதாக இருந்ததாம். அதனால் அந்த பிள்ளை எழும்பவில்லை; தவழவில்லை; ஓடவில்லை, படுத்த படுக்கையாகவே இருந்தது. எல்லாமே படுக்கையில்தான் நடக்கும். சுமார் 8 வருடங்கள் கடந்தபின்பு இவருடைய அப்பா அம்மாவிற்கு இந்த பிள்ளை பெரும் பாரமாகக் காணப்பட்டது.

அந்த வீட்டிற்கு ஜெபிக்க வரும் போதரிடம் இந்த பிள்ளையை பரிசுத்தப்படுத்தி கர்த்தர் எடுத்துக் கொள்ள ஜெபியுங்கள் என்று சொல ஆரம்பித்தார்கள். அதனால் தான் கர்த்தர் “உன் தகப்பனும் தாயும் கைவிட்டாலும் நான் உன்னை சேர்த்துக் கொள்வேன்” என்கிறார். அந்த ஊழியக்காரர்கள் அப்படியே ஜெபம் பண்ணிணார்கள். இதனால் அந்தப் பிள்ளையின் பாட்டிக்கு மிகவும் வருத்தம் உண்டாயிற்று. உங்களுக்கு பாரமாயிருந்தால் நான் கொண்டு போய் வளர்க்கிறேன் என்றார்கள். பாட்டியின் வீடிற்கு பிள்ளை எடுத்துச் செல்லப்பட்டது.

அந்த பிள்ளை வளராவிட்டாலும் அறிவு இருக்கிறது. தான் சாகட்டும் என்று இவர்கள் ஜெபிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கண்ணீர் வடித்ததாம். பின்பு 8 வருடம் அதாவது 16 வயது வரை அவனுடைய பாட்டி வளர்த்தார்கள். பல காரியங்களை சிந்திக்கக் கூடிய அறிவு இருந்தது, ஆனால் எழும்பி நடக்க முடியாது. முடிவில் பாட்டியும் கைவிட்டுவிட்டார்கள். பாட்டியின் வீட்டிற்கு வரும் ஊழியக்காரர்களிடம் இந்த பிள்ளை பரிசுத்தப்படுத்தி எடுத்துக் கொள்ள ஜெபிக்கச் சொன்னார்கள். இதை அறிந்த அந்த பிள்ளை மிகவும் வேதனைப்பட்டது.

அப்போ ஒரு நாள் விசுவாசமுள்ள போதகர் ஒருவர் ஜெபிக்க வந்தார். அவர் இந்தப் பிள்ளையைப் பார்த்து நீ சுகமாக விரும்புகிறாயா? என்று கேட்டார். உடனே அவர் ஆம் நான் சுகமாக விரும்புகிறேன் என்றார். வேதத்தில் உள்ள வசனத்தைக் கூறினார். “நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்தில் விரும்பி எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அது உங்களுக்க உண்டாகும் என்ற வசனத்தைச் சொல்- ஜெபித்தார். (மாற். 11:24)

எனவே நாம் ஜெபத்தில் சில காரியங்களுக்கு ஜெபித்தாலும் உன் உள்ளான விருப்பம் எதுவோ அதன்படி தான் காரியங்கள் சம்பவிக்கும். எனவே “ஹேகின் என் விருப்பம் என்ன”? என்று போதகர் கேட்டார். இந்த பையனோ நான் சுகமடைய விரும்புகிறேன்; நான் எழும்பி நடக்க விரும்புகிறேன் என்றானாம். அப்படியானால் நீ விரும்பி விசுவாசத்தோடு கேட்ட காரியம் உனக்கு உண்டாகும் என்ற வேதம் சொல்கிறது. எனவே நீ சுகத்தைப் பெற்றுக் கொண்டாய் என்று தேவனுக்கு நன்றி சொல்லு என்ற சொல்-விட்டு போதகர் போய்விட்டார்.

அன்றி-ருந்து அந்த வசனத்தைச் சொல்-ச் சொல்- ஹென்னத் ஹேகின் ஜெபம் பண்ணி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்ல ஆரம்பித்தார். ஒரு நாளில் ஒரு பகல் வேளையில் அவரின் பாட்டி கடை வீதிக்குப் போயிருந்த நேரம் அவர் தங்கியிருந்த அறையில் இயேசு

தத்ரூபமாய் இறங்கி வந்தார். இயேசு ஹென்னத் ஹேகினைப் பார்த்து நீ சுகமாக விரும்புகிறாயா? என்று கேட்டார். விரும்புகிறேன் ஆண்டவரே என்று சொன்னார். வருகிற ஞாயிற்றுக்கிழமை 16 வயது வா–பனைப் போல் பேண்ட், சட்ர், சூ, டை எல்லாம் அணிந்து கொண்டு வேதாகமத்தை கையில் எடுத்துக் கொண்டு நீ தேவலாயத்திற்கு நடந்து போகப் போகிறாய் என்று சொன்னார். அப்படியானால் ஞாயிற்றுக்கிழமை நீ தேவாலயம் செல்ல புத்தாடைகள் வாங்கி வைத்துக் கொள் என்று சொல்– விட்டு ஆண்டவர் மறைந்துவிட்டார்.

அவனுடைய பாட்டி கடை வீதியி–ருந்து திரும்பி வந்தவுடன் "பாட்டி ஆண்டவர் என்னிடத்தில் வந்தார் என்று இந்தப் பையன் சொன்னான். இவன் சாகப் போகிறதற்கு முன் பிரகாசம் கொடுக்கிறான் என்பதாக பாட்டி நினைத்தார்கள். ஹென்னத் ஹேகினை பரிசுத்தப்படுத்தி நம் ஜெபத்திற்கு பதிலாக ஆண்டவர் எடுத்துக் கொள்ளப் போவதாக நினைத்தார்கள். ஆனால் ஹேகினோ விசுவசத்தோடு பாட்டியிடம் இயேசு சொன்னவற்றையெல்லாம் சொன்னான். என்னை எழும்பி நடக்க வைத்து ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் சாட்சி சொல்ல வைப்பதாக ஆண்டவர் சொல்–யிருக்கிறார். என்றாலும் நான் இப்போது 3வயது குழந்தை போ–ருக்கிறேன். ஆனால் அமெரிக்காவில் 16 வயதுடையவர்கள் ஐந்தரை அடி உயரத்தில் இருப்பார்கள். ஆகவே அந்த உயரத்தில் வா–பன் போடுவது போல ஒரு பேண்ட் சட்டை, ஒரு முழுக்கை சட்டை, சூ, சாக்ஸ், புது வேதாகமமம் இவ்வளவும் வாங்கித் தாங்க பாட்டி என்று கேட்டான். ஞாயிறு அன்று **"ஆண்டவர் எனக்கு சுகம் தருவார் அவற்றை மாட்டிக் கொண்டு உங்களோடு ஆலயத்திற்கு வருவேன்"** என்று கூறினான்.

அடக்க ஆராதனையில் போட வேண்டிய புத்தாடைகளைத் தான் தன் பேரன் கேட்கிறான் என்று பாட்டி நினைத்துக் கொண்டு இவன் சாகிறதற்காய் ஜெபித்த ஜெபத்தை கேட்டீர், அதற்காக நன்றி என்று ஆண்டவருக்கு சொன்னார்கள். மேலும் அணையப்போகிற தீபம் பிரகாசம் கொடுப்பது போல் நம் பேரன் சாவதற்கு முன்பாக தெளிவோடு பேசுகிறான் என்ற நினைத்து உடனே அவன் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கண்ணீரோடு ஒரு பெட்டியில் வைத்துக் கொடுத்தார்கள். ஹென்னத் ஹேகினுக்கு மிகுந்த சந்தோஷம் நாளை காலை 8.30 மணிக்குள் நான் என் விசுவாசத்தை அப்பியாசிக்கப் போகிறேன், கர்த்தர் என்னைக் குணமாக்குவார் என்று விசுவாசித்தான்.

மறுநாள் காலை 8.30 மணிக்கு மிகவும் ஆவலுடன் எதிர்பாத்த்துக் கொண்டிருந்தான். இதே வேளையில் இவன் எப்படி மரிப்பானோ என்ற பயத்தில் பாட்டி குளியறைக்கள் சென்று விட்டார்கள். சரியாக 8.30 மணிக்கு இயேசு வந்தார் ஹேகின் எழுந்து நட என்று இயேச சொன்னார். உடனே அவன் எழுந்து ஓடிப் போய் ஆண்டவருடைய பாதத்தைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடித்தான். சிறிது நேரத்தில் 16 வயது வா–பன் போல் கை, கால்கள் வளர்ந்து சரீரமெல்லாம் பெரிதாகி பெரிய வா–பனாகிவிட்டான். ஆடைகள் எல்லாம் போட்டு ஆலயத்திற்குச் செல்ல தயாராகிவிட்டான். பாட்டி வந்து பார்த்தால் பெரிய வா–பன் நின்று கொண்டிருந்தான். **விசுவாசம் என்பது பேச்சில் அல்ல பெலத்தில் இருக்கிறது. எது விசுவாசம்?** உள்ளே இருக்கிற இதயத்தின் விசுவாசத்தை வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துவதுதான் விசுவாசம்.

கர்த்தருடைய வார்த்தையை அப்படியே விசுவாசிப்போம். சொன்ன கர்த்தர் வாக்கு மாறாதவர். அப்படியே செய்வார். அதற்கு மாறாக எதிரிடையான காரியங்களையும் தூக்கிப் போடுவோம்.

நன்றி : Pr. மா. ஜான்ராஜ் (விசுவாசத்தை வளர்ப்பது எப்படி)

## மத்தியப்பிரதேசம்

**சகோ. அந்தரியாஸ் வாசுனியா** **ஜெய்டா**

இந்துபேன் என்ற சகோதரிக்கு வயிற்றில் கட்டி இருந்தது. மருந்துகள் சாப்பிட்டும் கட்டி கரையவில்லை. ஆலயத்திற்கு வந்து விசுவாசித்து ஜெபித்தபோது கட்டி கரைய தேவன் கிருபை செய்தார்.

**சகோ. பூர்சிங் டாமோர்** **வட்டா**

கான்ஜி டாமோர் என்ற சகோதரரின் மகள் பிசாசின் பிடியில் இருந்து மிகவும் வேதனைப்பட்டு வந்தாள். சபைக்கு வந்து விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியி–ருந்து முற்றிலும் விடுதலை கொடுத்தார்.

**சகோ. தேவ்சந்த் புரியா** **தேவ்கா**

ரக்ஷா என்ற சகோதரி பக்கவாத்தினால் நடக்கமுடியாமல் கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் தேவன் அற்புதமான சுகத்தை அந்த சகோதரிக்குத் தந்து நடக்கச் செய்தார்.

**சகோ. அஜய்சிங் தோமார்** **அம்பா**

அமோரி என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. விசுவாசித்து ஜெபித்தபோது, தேவன் அந்த சகோதரிக்கு விஷத்தை நீக்கி ஜீவனைப் பாதுகாத்தார்.

**சகோ. மங்கள்சிங் வாசுனியா** **சலாக்கியா**

தாவூத் என்ற சகோதரர் வயிற்றில் கட்டியினால் ஐந்து ஆண்டுகளாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். ஆலயத்திற்கு வந்தார், அவருக்காக விசுவாசித்து ஜெபித்த போது தேவன் வயிற்றிலுள்ள கட்டி நீங்கும்படி செய்தார்.

## குஜராத்

**சகோ. பாபு L. டாமோர்** **நான்டுகன்**

கோகிலாபேன் என்ற சகோதரிக்கு திருமணமாகி அநேக ஆண்டுகளாக குழந்தை இல்லாமல் இருந்தது. இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகு தேவன் இப்பொழுது ஒரு குழந்தையை தந்து ஆசீர்வதித்தார்.

**சகோ. சாகன் பார்கி** **மத்வா**

தினேஷ்பாய் என்ற சகோதரர் கழுத்தில் கட்டி இருந்தது. அநேக மருந்துகள் சாப்பிட்டும் எந்த பலனுமில்லை. இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. சந்து டாமோர்** **ஹட்மத்கூட்டா**

அல்கேஷ் என்ற 12 வயது சிறுவன் ஆண் உறுப்பு பகுதியில் கட்டி வந்து நடக்கமுடியாமல் கஷ்டப்பட்டான். ரூ. 1500 செலவு செய்தும் எந்த பலனுமில்லை. மந்திரவாதிகளிடம் சென்றும் எந்த பலனுமில்லை. ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. ரீவ்லா ரட்டுவா** **ஜாம்லா**

ராஜேஷ்பாய் என்ற சகோதரர் வயிற்றில் வீக்கம் ஏற்பட்டு கஷ்டப்பட்டார். ரூ. 5000 செலவு செய்தும் எந்த பலனுமில்லை. விசுவாசித்து ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார்.

**சகோ. சாவ்சிங் டாமோர்** **கார்வானி**

புராபாய் என்ற சகோதரர் 2 வருடமாக ஆஸ்துமா வியாதியினால் பாதிக்கப்பட்டார். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

## இராஜஸ்தான்

**சகோ. ரினேஷ்வர் F. வசாயா** **பஜார்**

எங்கள் கிராமத்தை சேர்ந்த அமர்சிங்பாய் என்பவரின் மனைவி காக்காவ–ப்பு வியாதியினால் பாதிக்கப்பட்டு ஒரு முறை வயலுக்கருகிலும், கிணற்றுப் பக்கத்திலும் விழுந்துவிட்டார். ஜெபிக்க வீட்டிற்கு அழைத்தார்கள். ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. ஆஷிஸ் மச்சார்** **காடுளி**

ராகேஷ்பாய் என்ற சகோதரர் பல தவறான காரியங்களையும், பாவங்களையும் செய்து வந்தார். ஒரு நாள் திடீரென பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு கை, கால் செய–ழந்துவிட்டது. அதிக பணம் செலவழித்து மந்திரம் செய்தும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. நான் அவர்களிடம் இயேசுவை பற்றி கூறியபோது விசுவாசித்து ஜெபித்தார்கள். தேவன் கை, கால்களில் பூரண விடுதலையும் சுகத்தையும் தந்தார்.

**சகோ. ஜலாம் S. டின்டோர்** **தாடாவாட்லா**

ராமுடி என்ற சகோதரியின் சிறு குழந்தை சாத்தான் பிடியினால் பாதிக்கப்பட்டு அழ ஆரம்பித்தது. மந்திரவாதியிடம் சென்றும், மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இவருடைய பெற்றோர் இயேசுவை விசுவாசித்து சபைக்கு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. கல்சிங் பார்கி** **டெப்ரி**

மஞ்சுளா என்ற சகோதரிக்கு வலது கை செயல்படாமல் போய்விட்டது. அதிக பணம் செலவு செய்து மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. அந்த்ரு B. பாரியா** **வல்கூன்**

நார்சிங்பாய் என்ற சகோதரர் வயிற்றில் கட்டி இருந்தது. ரூ. 10000 மருத்துவமனைக்கு செலவு செய்தும், மேலும் மந்திரவாதியிம் சென்றும் எந்த பலனுமில்லை. ஆலயத்திற்கு வந்தபோது இயேசுவை விசுவாசித்தார். ஜெபித்தபோது விடுதலை கிடைததது.

### ஷாலோம் மார்த்தாண்டம் கிளை அலுவலகம்

***Bro. G. Selvadurai***

Iikal House, Near A.G.Church
Gnaramvilai, Pacode.P.O K.K Dist, Tamil Nadu 629168

Cell : 94876-89869

சென்னையில் தொடர்பு கொள்ள...

| ***Bro. B. Ebenezer Daniel*** | ***Bro. D. Diaz Bose*** |
|---|---|
| New no:38 Old No:76A, 2nd Floor,<br>3rd St, Gill Nagar,<br>Choolaimedu, Chennai,<br>Tamil Nadu 600 094 | No.16F 1, M.R.J. Apartments<br>Andavar Nagar, 5th Street<br>Kodambakkam, Chennai,<br>Tamil Nadu 600 024 |
| Cell : 934 44-75468 | Cell : 90427-80315 |

# ஐசக் வாட்ஸ்

***மிஷனெரி முன்னோடிகள்***



**ஐசக் வாட்ஸ்,** அவர்கள் சௌதாம்ப்டனில் 1674ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ம் தேதி பிறந்தார். ஐசக் வாட்ஸ் என்பது இவருடை முழுப் பெயராகும். குடும்பத்தில் பிறந்த ஒன்பது மக்களுள் இவர் முதல் பிறந்தவர். இவருடைய தந்தை ஆசிரியராக பணியாற்றி வந்தார். வாட்ஸ் பெலவீனமான சரீரம் படைத்தவர். இளமையி–ருந்தே கூர்மையான புத்தியும் எதையும் கற்பதில் ஆர்வமுள்ளவராகவும் காணப்பட்டார்.

வாட்ஸ் பதினெட்டு வயது நிரம்பின வா–பனாயிருக்கும்போது, அவருடைய தந்தை சௌதாம்ப்டனிலுள்ள ஒரு சிறிய ஆலயத்தில் டீக்கனாகப் பணியாற்றி வந்தார். ஆலய ஆராதனையில் சரியாக இசையமைக்கப்படாத தாவீதின் சங்கீதங்கள் பாடப்பட்டு வந்தன. வாட்ஸ்–க்கு அவைகள் இனிமையாகத் தோன்றவில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று தம்முடைய தந்தையுடன் அதைக் குறித்துப் பேசினார். அதற்கு அவர் வா–பனே, அப்படியானால் நீ அவைகளைவிட மேலானதைச் சபைகளுக்குக் கொடு என்று கூறினார். அதை சவாலாக எடுத்து, உடனடியாக அன்று சாயங்கால ஆராதனைக்குள் ஒரு ஞானப் பாட்டை எழுதி, அதற்கு இசை அமைத்துக் கொடுத்தார். அன்று அது ஆலயத்தில் பாடப்பட்ட பொழுது, சபையின் மக்கள் அதனைப் புகழ்ந்தனர். அது முதல் அவருடைய பாடல்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. தம்முடைய படிப்பை முடித்தவுடன் லண்டன் மால நகரத்தில் ஒரு ஆலயத்தில் சபை குருவாக ஊழியம் செய்தார். சுமார் ஐந்து வருடங்களுக்குப் பின்பு அவருடைய உடல் நலம் குன்றியதால், 1714ஆம் ஆண்டு ஹெர்போர்டுஷையரி–ருந்து சர்தமாஸ் அபினியும்,. அவருடைய மனைவியும் ஓய்வு எடுக்கும்படி அவரை வற்புறுத்தி, தங்களிடம் தங்கும்படி அழைத்தார்கள். அவர்களுடன் தங்கி இருக்கும்போது, தான் விரும்பின போது சபை மக்களைச் சந்திக்கவும், ஆலயங்களில் பிரசங்கங்கள் செய்யவும், தம்முடைய எழுத்துப் பணியில் ஈடுபடவும் அவகாசம் அவருக்குக் கிடைத்தது.

டாக்டர் வாட்ஸ் புகழ் பெற்ற ஒரு கவிஞர், சிறந்த எழுத்தாளர். திருமறை விளக்கங்கள், சரித்திரம், தத்துவ சாஸ்திரம், கட்டுரைகள் எழுதி வந்தார். ஆனால் ஞானப்பாட்டுகள் மூலம் புகழ் பெற்றார். தம்முடைய ஞானப் பாட்டுகளை மக்கள் பாடி, அவைகளின் மூலமாய் மக்கள் கிறிஸ்துவினண்டை வரவேண்டும் என்பது அவருடைய பேராவல். இதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

ஐரோப்பாவில் முதன் முதலாக பதினாறாம் நூற்றாண்டில்தான் ஆலய ஆராதனையில் ஞானப்பாட்டுகள் பாடப்பட்டன. 1542ஆம் வருடம் மார்ட்டின் லூத்தர் அவர்களை ஒன்றாகச் சேர்த்து வின்ஸ்டன்பார்க் என்னுமிடத்தில் வெளியிட்டார். இவைகளே கிறிஸ்தவச் சபைகளில் பாடப்படும் ஞானப்பாட்டுகளுக்க ஆரம்பமாகும்.

டாக்டர் வாட்ஸ், சார்லஸ் வெஸ்– என்பவர் காலம் வரைக்கும் ஆங்கில மக்களால் ஞானப்பாட்டுகள் ஆதரிக்கப்படவில்லை. சார்லஸ் வெஸ்– 6500 பாடல்களை எழுதியுள்ளார். அவைகளில் 500 பாடல்கள் மட்டுமே இப்பொழுதும் பாடப்பட்டு வருகிறது. டாக்டர் வாட்ஸ் எழுதிய பாடல்கள் 454 ஆகும்.

டாக்டர் ஐசக் வாட்ஸ் ஆங்கில ஞானப் பாட்டுகளின் பிதா என்று அழைக்கப்பட்டார். இவர் முதன் முறையாக எழுதிய பாடல்கள், சார்லஸ் வெஸ்– பிறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு, அதாவது 1706 ஆம் ஆண்டு புத்தகமாக வெளியிடப்பட்டது. இவர் எழுதிய ஞானப்பாட்டுகளில் "கர்த்தாவே யுக யுகமாய்" "பகலோன் கதிர் போலுமே" "என் அருள் நாதா இயேசுவே" என்று ஆரம்பிக்கும் பாடல்களை பாமாலை புத்தகத்தில் காணலாம். இவைகளை நாம் உணர்ந்து பாடும் போது நம்முடைய உள்ளத்தைக் கவர்ந்து, நம் மனதைப் பரவசமடையச் செய்கின்றது.

இப்பாடல்களில், "கர்த்தாவே யுக யுகமாய், என் துணை ஆயினீர்" என்று ஆரம்பிக்கும் பாடலை கிறிஸ்தவச் சபையின் தேசிய கீதம் என்று ஆங்கில மக்கள் சொல்வதுண்டு, இங்கிலாந்தில் எல்லா தேசீய நிகழ்ச்சிகளிலும் பாடப்பட்டு வரும் பாடல் இதுவாகும். இந்தப்பாடல் 9ம் சங்கீதத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

உடல் நலம் பாதிக்கப்பட்டு, 1748ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் நாள் தமது 75வது வயதில் ஐசக் வாட்ஸ் மரித்தார். அவர் மரிப்பதற்கு சற்று முன்பு, கடவுளின் அழைப்பிற்காகக் காத்திருக்கிறேன். கிறிஸ்து சிந்தின இரத்தத்தால் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நான் அவரிடம் அச்சமின்றிச் செல்வேன் என்று கூறியவைகள் அவரது கடைசி வார்த்தைகளாகும்.

---


## இணையதளத்தில் நமது அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்



***பிரியமானவர்களே,***

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web address : http://www.shalommission.in**

# SHARING LOVE MISSION

**Field Office** : Shalom Bhavan, Christian Kamdhar Sociey,
Dahod - 389151, Gujarat.

**Head Office** : 5/168, Caldwell Colony 3rd Street, Tuticorin - 628 008.

## *VISION STATEMENT*

**To Lead the entire Bhil people into the Lordship of God the Father, the Lord Jesus Christ and the Holy Spirit in turn to bring revival among and through the body of Christ throughtout our nation and universe.**

## *MISSION STATEMENT*

**To Lead and transform on million Bhils in the body of Christ by empowering the existing belivers, pastors and evangelists through the Word of God, discipleship, leadership training and holistic developments by 2020**

# காணிக்கை அனுப்பும் வழிகள்

⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.

⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.

⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.

⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் ‘‘V. DEVADASS’’ (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால்**
**அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

## நாட்டு நடப்புச் செய்திகள்....

வெயில், காற்று, மழை, புயல், சூறாவளி, காட்டுத்தீ என இயற்கை சீறும்போது மனித குலம் பெரிதாக பாதிக்கப்படுகிறது. இவற்கை தடுக்க முடியாது என்றாலும் தப்பிக்கும் வித்தையை தெரிந்து வைத்திருப்பது நமது அறிவியல் தொழில்நுட்பத்தின் சாதனை. கடல் அலை மட்டத்தில் ஏற்படும் விபரீத மாற்றத்தை வைத்து சுனாமியையும் முன்கூட்டி உணரக்கூடிய அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். இதில் அடுத்தக்கட்ட முயற்சியாக வரப்போகும் பூகம்பத்தை முன்கூட்டி தெரிந்துகொள்வதாகும். இங்கிலாந்து மற்றும் ரஷ்ய விஞ்ஞானிகள் லண்டன் கல்லூரியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆலன் ஸமித், விட்டா– சிம்யேரெவ் ஆகியோர் தலைமையில் இணைந்து மாஸ்கோவில் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இந்த சோதனை வெற்றிகரமாக முடிந்ததையடுத்து, செயல்பாடுகளையும் துவக்கியுள்ளனர்.

17.02.2011 அன்று பங்ளாதேஷ் தலைநகர் தாக்காவில் வைத்து ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பைக்கான துவக்க விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதற்கான போட்டிகள் இந்தியா, பங்ளாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவில் நொய்டா, குர்கானை தொடர்ந்து காஜியாபாத்தை இணைக்கும் மெட்ரோ ரயில் திட்டம் வரும் ஜுன் மாதம் முதல் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காஜியாபாத்தை இணைக்கும் வகையில் ஆனந்த் விகார் & உத்திரப்பிரதேசத்தின் வைசா– நகரங்களை இணைக்கும் வகையில் மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இது வரும் ஜுன் மாதம் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி : www.dinakaran.com

## எங்களுடன் தொடர்பு கொள்ள


தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



கிராம ஆலயம்

# பாவ்கா

## குஜராத்

பாவ்கா கிராமம் குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்தில் உள்ளது. குடிகாரர்கள், முரட்டாட்டக்காரர்கள் நிறைந்த பகுதியாகும். இயேசு என்ற பெயரினை ஒரு முறை கூட அறிந்திராத இக்கிராமத்தில் சகோ. ராம்சிங்பாய் என்பவரது வீட்டினை அநேக ஆண்டுகள் வரை செய்வினை ஆவிகளும், அசுத்தாவிகளும் ஆட்கொண்டு வந்தன. ஒரு நாள் நமது சுதேச ஊழியர் சகோ. ரமேஷ் கைப்பிரதிகளைக் கொடுத்து வீடுவீடாகச் சென்று சுவிஷேச நற்செய்தி கூறியதின் விளைவாக, இயேசுவை சொந்த இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொண்டு எல்லாக் கட்டுகளிருந்தும் அற்புத விடுதலை பெற்றார்கள் சகோ. ராம்சிம்பாய் குடும்பத்தார். பின்பு ஞானஸ்நானம் பெற்று வீட்டிற்குள் நுழைந்தபோது வீட்டிற்குள் இருந்த அசுத்தாவிகள், செய்வினை ஆவிகள் வீட்டின் நடுப்பகுதியின் கூரையைப் பிய்த்துக் கொண்டு வெளியேறின. தொடர்ந்து அக்கிராமத்தில் தேவன் செய்த அநேக அற்புத அடையாளங்களின் மூலமாக அநேக மக்கள் ஆண்டவரண்டை திரும்பினார்கள். தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என்று உணர்ந்து சகோ. ராம்ஜிபாய் தன் நிலத்தினை காணிக்கையாகத் தர அந்த இடத்தில் ஆலயம் கட்டப்பட்டு, ஆராதனைகள் நடைபெற்று வந்தன. அந்த இடத்தில் ஊழியத்திற்கு அதிகமான எதிர்ப்புகள் இருந்த போதிலும் ஊழியம் நன்றாக வளர்ந்தது. விசுவாசிகளின் பெருக்கத்தின் காரணத்தினால் அந்த ஆலயத்தில் இடம் போதவில்லை ஆகவே அதே இடத்தில் ரூ. 1,20,000/– செலவில் புதிதாக பெரிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. தற்போழுது ஷாலோம் போதகர் Rev. பாகா கட்டாரா அவர்கள் தேவ வல்லமையோடும், தரிசனத்தோடும் ஊழியம் செய்து வருகிறார். இங்கும் சுமார் 80க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர்.

இந்த கிராம ஆலயம் சாந்தபுரத்தைச் சேர்ந்த Bro. G. Alosius Thambi அவர்கள் குடும்பத்தின் சார்பிலும் மற்றும் நாசரேத்தைச் சேர்ந்த Bro. E. Rajan அவர்கள் குடும்பத்தின் சார்பிலும் கொடுத்த நிதி உதவிகளின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம்**
**நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **ரீனா டின்டோர்** |
| தந்தையின் பெயர் | : | கல்லு டின்டோர் |
| பிறந்த நாள் | : | 01.02.2001 |
| படிக்கும் வகுப்பு | : | 4th Std., |
| சொந்த ஊர் | : | ஜக்கோடியா |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |

## மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:—

ரீனா டின்டோருடைய தகப்பனார் இயேசுவை அறியாதவராய் இருந்தார். ஆகையால் விக்கிரக வணக்கமுடையவர்களாய் இருந்தனர். ஒரு முறை இவளின் தாய் பயங்கரமான கொடிய நோயினால் பாதிக்கப்பட்டாள். இதனால் குடும்பத்தில் மிகவும் துக்கமாக இருந்தனர். எந்த மருந்து கொடுத்தாலும் குணமடையவில்லை. கடைசியில் நமது ஷாலோம் ஊழியர் ஜெபித்தவுடன் இயேசு சுகத்தை கொடுத்தார். இதைக் கண்ட இவள் தகப்பனார் மற்றும் குடும்பம் முழுவதுமாக இயேசுவை ஏற்றுக்கொண்டனர். இப்போது சபையில் குடும்பமாக விசுவாசிகளாக இருக்கின்றனர்.

## திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:—

ரீனா டின்டோர் 4—ம் வகுப்பு படிக்கிறாள். நன்றாக படிப்பாள். நன்றாக பாடல் பாடி ஜெபம் செய்வாள். கோ—கோ நன்றாக விளையாடுவாள்.

## ஜெபியுங்கள்:—

ரீனா டின்டோரின் படிப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காக ஜெபியுங்கள்.

## மாணவியைத் தாங்குபவர் :— Mas. S.P.S. Sherwin, Chennai.

நீங்களும் மாதம் ரூ. 500/— கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.